முச்சந்தி முரளி



"அப்ப இனி வீட்டுக்கு
வீடு கஞ்சா
வளர்க்கோணும்
எண்டு குரல் குடுக்க
ஆர் வரப்போயினம்?"

Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 165

வியாழக்கிழமை
09 மே 2024

சித்திரை 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055




# மகாவலி ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு போராட்டம்

## ஆளுநர் அலுவலகம் முன்பாக முல்லை மக்கள் முன்னெடுப்பு

**யாழ்ப்பாணம், மே 9**

**மகாவலி அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் முல்லைத்தீவு மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

15

மன்னாரில்

# காற்றாலைத் திட்டத்தை எதிர்த்தே தீருவோம்!

## அமைச்சரவையின் முடிவுக்கு பிரஜைகள் குழு ஆவேசம்

**மன்னார், மே 9**

மன்னாரில் காற்றாலை உயர்மின் திட்டத்துக்கு இலங்கை அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையை ஒருபோதும் ஏற்கமுடியாது. எனவே முழுமையான மக்கள் பலத்துடன் இந்தத் திட்டத்தை எதிர்ப்போம் என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார்த் தீவில் காற்றாலைகளை அமைப் 15

சுகாதாரத்துறை ஊழியர்கள்

# ஓய்வுபெறும் வயதெல்லை: 61 ஆக குறைக்க முடிவு!

கொழும்பு, மே 9

சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களின் ஓய்வுபெறும் வயதை 61 ஆக குறைக்க முடிவு செய்துள்ளதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

முன்னதாக சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 63 என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே தற்போது வயதெல்லை 61 ஆகக் குறைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தாதிய சேவையில் ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிலையில் 3 ஆயிரம் தாதியரை சேவையில் இணைத்துக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதையடுத்தே சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையைக் குறைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

# போலி ஆவண மோசடி; ஒருவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மே 9

காணி உறுதிக்காக போலி ஆவணங்கள் தயாரித்து மோசடியில் ஈடுபட்ட நபர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சுவீடனில் வசித்துவரும் நபர் ஒருவருக்கு மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடொன்று 15

ரஷ்ய - உக்ரைன் போரில்

# சிறிலங்கா சிப்பாய்கள் கூலிப்படைகளாகச் சாவு!

## உறுதிப்படுத்தியது பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, மே 9

ரஷ்ய - உக்ரைன் போரில், இலங்கை இராணுவத்தின் முன்னாள் சிப்பாய்கள் கூலிப்படைகளாகப் போரிடுகின்றனர் என்றும் அவர்களில் பலர் கொல்லப்பட் 15

எம்.பி.யாகச் செயற்பட

# டயானாவுக்கு தகுதியில்லை

## உச்ச நீதிமன்றம் வரலாற்றுத் தீர்ப்பு



கொழும்பு, மே 9

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதற்கு சட்டபூர்வத் தகுதி எதுவும் இல்லை என உச்சநீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

பிரித்தானியக் குடியுரிமை பெற்றுள்ள டயானா கமகே, நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படத் தகுதியற்றவர் எனக் குற்றம் சாட்டி சமூக செயற்பாட்டாளரான ஓஷல ஹேரத் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைகள் 15

# டயானா உருவாக்கியுள்ள ஐ.ம.ச. சட்டபூர்வமானதா?

## அமைச்சர் காஞ்சன கேள்வி

கொழும்பு, மே 9

இலங்கைப் பிரஜையல்லாத டயானா கமகேயால் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சட்டபூர்வமானதா? 15

# ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் 6 கிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 15

# டயானாவின் இடத்துக்கு முஜிபுர் ரஹ்மான்?

கொழும்பு, மே 9

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானை நியமிப்பதற்கு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நாடாளுமன்ற உறுப் 15

# கிராமியப் பொருளாதாரத்துக்கு முழுமையாக அர்ப்பணியுங்கள்

## புதிய கிராம அலுவலர்களுக்கு ஜனாதிபதி ரணில் அறிவுரை

கொழும்பு, மே 9

விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யாமல் கிராமிய பொருளாதாரத்தைப் பலப்படுத்தமுடியாது. எனவே அரசாங்கத்தின் விவசாய நவீனமயமாக்கல் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி – மன்னாரிலிருந்து அதானியிடம் மின் கொள்வனவு

## 20 வருட காலம் ஒப்பந்தம்

**கொழும்பு, மே 9**

**இலங்கையில் இரண்டு காற்றாலை மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக அதானி நிறுவனத்துடன் 20 வருட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்செய்தியாளர் சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 484 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலை மின் நிலையங்களை உருவாக்க 442 மில்லியன் டொலரை அதானி குழுமம் முதலீடு செய்ய கடந்த பெப்ரவரியில் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இந்த நிலையங்கள் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மன்னார் மற்றும் பூநகரியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் 20 ஆண்டுகளுக்கு கொள்முதல் செய்யப்படும். அதற்கான கட்டணமாக ஒரு கிலோவாற்று மணிக்கு 8.26 அமெரிக்க டொலர் கட்டணமாகச் செலுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## மீறப்பட்டது வாக்குறுதி

# தொடர் பணிப்பகிஷ்கரிப்பு சுகாதாரத்துறை ஆயத்தம்

கொழும்பு, மே 9

கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையில் மீண்டும் தொடர்ச்சியான பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

"சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப அறிக்கைக்கு அமைய கொடுப்பனவுகளை வழங்குவதாக உறுதியளித்ததன் காரணமாக 4 மாதகாலப் போராட்டம் கடந்த ஏப்ரல் மாதம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. எனினும் குறித்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில் இன்று முதல் மீண்டும் தொடர்ச்சியான பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பிக்கவுள்ளோம்.

மாகாணங்களிலுள்ள அனைத்து மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிலையங்களின் பணியாளர்கள் கடமையில் இருந்து விலகிச் செயற்படவுள்ளனர்" என்றும் சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ச-இ)

# ஜூன் மாதத்தினுள் கடன் மறுசீரமைப்பு

## அரசாங்கம் எதிர்பார்ப்பு

கொழும்பு, மே 9

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறையை ஜூன் மாதத்துக்குள் நிறைவு செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றும் முழுமையான கடன் மறுசீரமைப்புப்பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதன் மூலம் இலங்கையின் கடன் சுமையை 17 பில்லியன் அமெரிக்க டொலராகக் குறைக்க முடியும் என்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று புதன்கிழமை அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் பரிஸ் கிளப் ஆகியவை கடன் மறுசீரமைப்புக்கு பெரும் ஆதரவை வழங்கின. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையைப் பெற்ற பின்னர் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



# மட்டக்களப்பில் விபத்து அதிபர்கள் படுகாயம்

மட்டக்களப்பு, மே 9

மட்டக்களப்பு வாகரை ஊரியன்கட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை அதிபர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகிறது.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச- 555)

# ஆசிரிய வெற்றிடங்கள்; ஆட்சேர்ப்பு நேர்காணல்

கொழும்பு, மே 9

தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு நேர்காணல்கள் நடத்தப்படவுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக டிசெம்பரில் நடைபெற்ற போட்டிப்பரீட்சை முடிவுகளின்படி ஆங்கிலப் பாடம் தொடர்பான ஆட்சேர்ப்பு நேர்காணல் இடம் பெறவுள்ளது.

அதன்படி, மே 10, 11, 13 மற்றும் 20 ஆகிய திகதிகளில் நேர்முகத் தேர்வு நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நேர்காணலுக்கான தகுதியான விண்ணப்பதாரர்களின் பெயர்ப்பட்டியல் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)



# ரூ. 700 பில்லியன் ஒரே நாளில் இழப்பு

கொழும்பு, மே 9

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் 2 டிரில்லியன் ரூபா மறுசீரமைப்பு காரணமாக ஒரே நாளில் 700 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக மத்தியவங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (ஒ-6)

# 'பேசுவோம் போரிடுவோம்' சுவிஸில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 9

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான உறுப்பினர் க.வே. பாலகுமாரன் எழுதிய 60 கட்டுரைகளின் தொகுப்பு அடங்கிய 'பேசுவோம் போரிடுவோம்' நூல் வெளியீடு சுவிற்ஸர்லாந்தின் வேர்ண் மாநிலத்தில் சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மூத்த படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், பொது அமைப்புகள், வர்த்தகர்கள், மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு பிரான்ஸில் இந்த நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (ச)




# படையினர் ஏமாறவேண்டாம்; பாதுகாப்புச் செயலர் கோரிக்கை



கொழும்பு, மே 9

ரஷ்ய - உக்ரைன் போர் நடவடிக்கையில் பணியாற்றுவதற்கு ஆட்களைச் சேர்க்கும் மனிதக் கடத்தல்காரர்களுக்குப் பலியாக வேண்டாம் என இலங்கை படையினருக்கு பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போர் நடவடிக்கையில் ஆயுதப் படைகளுடன் இணைப்பதான போலி வாக்குறுதிகளால் இலங்கைப் படையினர் ஏமாற்றப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நிலவுரிமை, குடும்ப உறுப்பினர்களுக்கு ரஷ்யக் குடியுரிமை மற்றும் ஒரு மில்லியன் ரூபாவுக்கும் அதிகளவான மாதச்சம்பளம் உள்ளிட்ட விடயங்களை முன்வைத்து ஏமாற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

# சிறுமி துஷ்பிரயோகம்; 20 வருட கடூழியச் சிறை

12 வயதுச்சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு இருபது வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது பலப்பிட்டிய நீதிமன்றம்.

மேலும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு பத்து இலட்சம் ரூபா நட்டஈடும் 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உரகஸ்மன்ஹந்திய பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவருக்கே இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு சுமார் 13 வருட கால விசாரணையின் பின் பலப்பிட்டிய நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளியின் உடல்நிலை மோசம்

## சிறைக்குள் அவரைப் பார்வையிட்ட எம்.பி.க்கள்

**கொழும்பு, மே 9**

**பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் தனது விடுதலையை வலியுறுத்தி கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்குள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் முன்னாள் போராளி அரவிந்தனின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக நேரில் பார்வையிட்டு திரும்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.**

கடந்த பெப்ரவரி மாதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு கொழும்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட முன்னாள் போராளியும், போராளிகள் நலன்புரி சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவருமான செல்வநாயகம் ஆனந்தவர்ணன் (அரவிந்தன்) மற்றும் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நீதிமன்றில் முற்படுத்தப்படாமல் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் மூதூரைச் சேர்ந்த எஸ். சுதாகரன் ஆகிய இருவரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது தனது விடுதலையை வலியுறுத்தி கடந்த இரண்டு நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆனந்தவர்ணன், தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரினார் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று மூதூரைச் சேர்ந்த எஸ்.சுதாகரன் என்பவரும் இந்தியாவிலிருந்து திரும்பும்போது கைதுசெய்யப்பட்டு கடந்த ஒருவருடத்துக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், தனது விடுதலைக்காக நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார். (ஒ-100)

## வித்தியா கொலை வழக்கு; நீதியரசர் துரைராஜா விலகல்

கொழும்பு, மே 9

மாணவி வித்தியா கடத்தப்பட்டு கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில்சாவுத்தண்டனை விதிக்கப்பட்ட சுவிஸ்குமார் உள்ளிட்ட ஐந்து பிரதிவாதிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்களை விசாரிப்பதற்காக பிரதம நீதியரசரால் நியமித்த ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாமின் தலைமை நீதியரசர் எஸ். துரைராஜா குழாமில் இருந்து விலகியுள்ளார்.

ஐவர் அடங்கிய அமர்வின் தலைமை நீதியரசர் எஸ்.துரைராஜா, தான் சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமையாற்றிய காலத்தில் இந்த வழக்கின் விவகாரங்களை மேற்பார்வையிட்டதால் இந்த மேன்முறையீட்டு விசாரணையில் இருந்து விலகத் தீர்மானித்ததாகத் தெரிவித்தார்.

அதன்பிறகு, இது தொடர்பான மேல்முறையீட்டு மனுக்களை ஜூலை 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டது. (ஒ-இ)

## பல்பொருள் அங்காடிக்கு ஒன்றரை லட்சம் ரூபா தண்டம்

திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி ஒன்றின் உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

திருநெல்வேலிப் பொதுச்சுகாதாரப்பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் கடந்த பெப்ரவரி மாதம் திருநெல்வேலியில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடிகளில் திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது காலாவதியான பொருள்கள், பழுதடைந்த பொருள்கள் என்பவற்றை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில், மேற்படி பல்பொருள் அங்காடி உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதி வழக்குத்தொடரப்பட்டது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின்போது குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட பல்பொருள் அங்காடி உரிமையாளருக்கு, நீதிவான் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் கடுமையாக எச்சரிக்கையும் விடுத்துள்ளார். (ப-66)

## உள்ளகப்பொறிமுறையால் எந்தவொரு தீர்வும் கிடைக்காது

### நாடாளுமன்றில் சுமந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, மே 9

போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளகப் பொறிமுறை மூலமாக சரியான நீதி கிடைக்காது என்பதற்கு போர் முடிவடைந்த இந்த 15 வருட காலமாக எதுவுமே நடக்காமல் இருப்பதே சான்றாக உள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

"இன்னுமொரு நல்லிணக்க செயலணியைக் கொண்டு வருவதை நாங்கள் எதிர்க்கின்றோம். இது செப்ரெம்பரில் வரவுள்ள ஜெனிவா அமர்வுக்கு காண்பிக்கும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகும்.

இது தொடர்பில் நாங்கள் உலகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவோம், ஒரு நிரந்தர அரசியல் தீர்வின்றி எந்தவித நல்லிணக்கமும் ஏற்படமுடியாது சர்வதேச நீதிமன்றப் பொறிமுறை ரோம் சட்டத்தின் ஊடாக மட்டுமே நடத்தப்படும். எனவே இலங்கை அரசாங்கம் ரோம் சட்டத்துக்கு இணங்கவேண்டும்" - என்றார். (ஒ-இ)

## புதினம் தெரியுமோ?

**ஊ**க்குவிக்கிறவை இருந்தால் ஊக்கு விக்கிறவனும் தேக்கு விக்கிறளவுக்கு உயர்வான். ஆனால் இஞ்ச ஊக்குவிக்கிறவையை விடவும் ஆப்பு வைக்கிறவைதான் கூட. தாங்களும் முன்னேற மாட்டினம், வேற ஆரும் முன்னேறவும் விடமாட்டினம். அதால தானே இப்பவும் எங்கட சனம் இப்பிடி ஆத்துலைஞ்சு கொண்டிருக்குது.

மன்னாரில ஒரு மாற்றுத்திறனுள்ள பெண் ஓராள், பிறத்தியாரிட்டக் கையேந்தாமல் தன்ர சொந்தக்காலில நிக்கோணும் எண்டு ஆசைப்பட்டா. அரிசிமா, குரக்கன் மா, சிறுதானியக் கஞ்சிக் கலவை எண்டு 40க்கும் மேற்பட்ட உற்பத்திகளை வீட்டை வைச்சு அவாவே பார்த்துப் பார்த்துப் பக்குவமாச் செய்ததால, எல்லாப் பொருள்களுமே சனத்துக்கு நல்லாப் பிடிச்சுப்போட்டுது. கடைக்காரர், வெளிநாட்டுக்காரர் எண்டு அவான்ர கைப்பக்குவத்தில செய்த இந்தச் சத்தான சாப்பாட்டுச் சாமான்களை கேட்டுவாங்கத் தொடங்கிட்டினம். அதால மெல்ல மெல்ல ஆக்களையும் வேலைக்குப் போட்டு தன்ர சுயதொழிலை அவா டெவலப் பண்ணத் தொடங்கினா. என்னதான் யாவாரமும் உற்பத்தியும் கூடினாலும் கூட, தன்ர உற்பத்தியள் எல்லாமே தரமாவும் ஒரே சுவையாவும் இருக்கோணும் எண்டதில அவா கண்ணும் கருத்துமா இருந்திருக்கிறா. ஒவ்வொரு நாளும் பிஸ்னஸ் ஏறுமுகம். இப்பிடியிருக்கேக்க ஒருநாள் அவாக்கு ஒரு போன் வந்திருக்கு.

"அக்கா, உங்கட குரக்கன் மா நெடுக வாங்கிறனாங்கள். இண்டைக்கு வாயில வைக்கேலாம இருக்கு. ஒரே கல்லும் மண்ணுமாக்கிடக்கு எண்டு முறைப்பாடு. ஒருநாளும் இல்லாத திருநாளா இப்பிடியொரு முறைப்பாடு வருகுதே" எண்டு அவா இடிஞ்சுபோய் நிக்கேக்க, இன்னும் இடி முடியேலை எண்டமாதிரி அண்டைக்கு மட்டும் ஏழெட்டு முறைப்பாடு. அவாக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. தன்னட்ட வேலை செய்யிறவையைக் கூப்பிட்டு, "ஏதோ தவறுதலா இப்பிடி மண்ணும், கல்லும் மாவுக்குள்ள போட்டுது. இனிமேல் கவனமா இப்பிடியொரு சம்பவம் நடக்காமல் பாருங்கோ" எண்டு சொல்லியிருக்கிறா. ஆனால் அதுக்குப் பிறகும் முறைப்பாடுகள் வாறது நிக்கேலை. விக்கிறதுக்கு குடுத்த சாமான்களை எல்லாம் திரும்ப எடுத்திட்டு, புதிசா செய்த பொருளை 'பைக்'பண்ணிக் குடுத்தாலும் அதே பழைய கல்லும், மண்ணும் இருக்கெண்ட முறைப்பாடு மட்டும் குறையிறதாக் காணேலை.

எங்கையோ பிளான் பண்ணி பிழை நடக்குதெண்டது மட்டும் அவாக்கு விளங்கிட்டுது. ஆனால் அது எங்கையெண்டுதான் தெரியேலை. கடைசியில பார்த்தால், சிறுதானியக் கஞ்சிக் கலவைக்காக தயாராக வறுத்து வைச்சிருந்த வரகு - திணை கலவைக்குள்ள கல்லும், மண்ணும் வேணுமெண்டே ஆரோ கலந்திருக்கிறதை அவா கண்டுபிடிச்சிட்டா. அவாவிட்ட சம்பளத்தை வாங்கிக் கொண்டே ஆரோ ஓராள் பார்த்த வேலைதான் இது. உடனையே, சம்பளத்தைக் கொடுத்து அந்த வேலையாளை இனி வேற எங்கையாவது வேலைக்குப் போங்கோ எண்டு பக்குவமா அனுப்பிட்டா.

ஓராளின்ர கீழ்த்தரமான வேலையால இப்ப, இந்தச் சுயதொழில் செய்து முன்னேற நினைச்சவான்ர தொழிலே அடிபட்டுப் போட்டுது. இனி அவா பூச்சியத்தில இருந்து திரும்ப தன்ர தொழிலைத் தொடங்கவேணும். சிறுகச் சிறுக அவா கட்டின கோட்டையை இப்பிடி கல்லும், மண்ணும் கலந்து கலைச்சுப் போட்டினம். அந்தளவுக்கு இருக்கு எங்கட சனத்தின்ர வெப்பியாரம். இப்பிடி அடுத்தவையை அழிக்கிறதில காட்டுற அக்கறையை, எங்களை முன்னேற்றுறதில எங்கட ஆக்கள் காட்டினால் என்ன?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்
## (2024 - 2025)



புதனை ராசிநாதனாகக் கொண்ட மிதுனராசி அன்பர்கள், பிரச்சினைகள் எவ்வளவு வந்தாலும் தளராமல் சந்தித்து வெற்றிபெறுபவர்கள்.

பலர் கடின முயற்சி செய்து முடிக்கும் காரியங்களை தம் அனுபவ அறிவால் மிக எளிதாக முடித்துவிடுபவர்கள் இவர்கள்தான். மிருகசீரிடம் 3 ஆம் பாதம் முதல் புனர்பூசம் 3 ஆம்பாதம் வரையிலான நட்சத்திரங்களை உள்ளடக்கிய மிதுன ராசிக்காரர்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி எப்படிப்பட்ட பலன்களைக் கொடுக்கும் என்பதைக் காண்போம்.

இதுவரை மிதுன ராசிக்கு 11 ஆம் வீட்டில் அமர்ந்து பலவித நன்மைகளையும் வாரி வழங்கிக்கொண்டிருந்த குருபகவான் மே 1 ஆம் திகதி முதல் 12 ஆம் வீட்டில் வந்து அமர்ந்து பலன்தர இருக்கிறார். இனி செலவுகள் கூடும். அவற்றை சுபச்செலவுகளாக மாற்றிக்கொள்வது நல்லது. அலைச்சல்களும் அதிகரிக்கும். சிலருக்கு அவ்வப்போது வீண் கவலையால் தூக்கம் பாதிக்கப்படக் கூடும். புகழ்பெற்ற கோயில்களுக்குச் சென்று தரிசனம் செய்வீர்கள். இதுவரை தடைப்பட்ட குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

ராசிக்கு 4 ஆம் இடமான கன்னியை குருபகவான் பார்ப்பதால் நல்ல காற்றோட்டமான வீட்டுக்குக் குடிபோவீர்கள்.

ராசிக்கு 6 ஆம் வீடான விருச்சிகத்தை குருபகவான் பார்ப்பதால் கடன் பிரச்சினை ஒன்றைத் தீர்க்கும் வாய்ப்புக் கிடைக்கும். மறைமுக எதிரிகளின் தொல்லைகள் நீங்கும். நீண்ட நாள்களாக இருந்துவந்த நோயிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

ராசிக்கு 8 ஆம் வீடான மகரத்தை குருபகவான் பார்ப்பதால் ஆரோக்கியம் மேம்படும். பங்குச் சந்தை லாபம் தரும். ஆயுள் விருத்தி உண்டாகும். என்றாலும் தொட்டதெற்கெல்லாம் கோபப்பட்டுக்கொண்டு இருக்காதீர்கள்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

01.05.2024 முதல் 12.06.2024 வரை உங்கள் தைரிய ஸ்தானாதிபதி சூரியனின் கார்த்திகை நட்சத்திரத்தில் குரு பயணிப்பதால் அதிரடி முடிவுகள் எடுப்பீர்கள். இளைய சகோதரருக்குத் திருமணம் கூடி வரும். வெளியூர்ப் பயணங்கள் அதிகரிக்கும்.

12.06.2024 முதல் 19.08.2024 வரை மற்றும் 02.12.2024 முதல் 05.04.2025 வரை உங்களின் தனாதிபதி சந்திரனின் ரோகிணி நட்சத்திரத்தில் குரு செல்வதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். இங்கிதமாகவும், எதார்த்தமாகவும் பேசிப் பல விஷயங்களை சாமர்த்தியமாக முடிப்பீர்கள். திருமணம் கூடி வரும்.

19.08.2024 முதல் 02.12.2024 வரை மற்றும் 05.04.2025 முதல் 14.05.2025 வரை உங்கள் சஷ்டம லாபாதிபதியான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் குரு செல்வதால் சகோதர வகையிலும், வீடு சொத்துப் பராமரிப்பு வகையிலும் செலவினங்கள் அதிகரிக்கும். எதிர்மறை எண்ணங்கள் வந்துபோகும். ரத்த அழுத்தம் அதிகரிக்கும். புறநகர் பகுதியில் வீட்டு மனை அமையும்.

**வியாபாரம்**

கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் கறாராக இருங்கள். சரக்குகள் கொள்முதல் செய்யும் போது கவனம் தேவை. அதிக முதலீடு செய்து சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**உத்தியோகம்**

விமர்சனங்களும், வீண் பழியும் வந்து செல்லும். திறமை இருந்தும், கடினமாக உழைத்தும் அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்பட்டுக் கொண்டேயிருப்பீர்கள். அதிகாரிகள் ஆதரவாகப் பேசினாலும் கூடுதலாக உங்களுக்கு வேலைகளைத் தருவார்கள். சலித்துக் கொள்ளாமல் அந்த வேலைகளை முடித்துக் கொடுப்பது நல்லது.

இந்த குரு மாற்றம் ஓய்வில்லாமல் உங்களைக் கடினமாக உழைக்க வைத்தாலும், அதற்கேற்ற உயர்வில்லையே என சில நேரங்களில் ஏங்க வைக்கும்.

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சிலருக்கு பேச்சினால் வீண் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.



**இடபம்:** உற்சாகமான நாள். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும். மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கும். காரியத்தடைகள் விலகும்.



**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்ததைவிடவும் குறைவாகத்தான் இருக்கும். விநாயகரை வழிபடுவது நலம் சேர்க்கும்.



**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது. உடல் அசதி உண்டாகும். விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும்.



**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியை தவிர்க்கவும். பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். நிதானம் அவசியம். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம். சிறுசிறு வாக்குவாதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.



**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவு களையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அவ்வப்போது குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.



**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தசங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். துணிச்சலாக முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும்.



**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.



**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்களைச் சந்தித்துப் பேசுவீர்கள். ஆதாயம் பெற வாய்ப்பு உள்ளது.



**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை முழு ஒத்துழைப்பு தருவார். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.



**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். மகிழ்ச்சி ஏற்படும். விற்பனை அமோகமாக நடைபெறும்.



**மீனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர்ப் பண வரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் இடையூறுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.



## பேராசிரியர் வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், மே 9

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தமிழ் மன்றம் இணைந்து நடத்தும் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திருநாநந்தம் ஜெயக்காண்டீபன் தலைமையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சரஸ்வதியரங்கில் இருநாள் நிகழ்வுகளாக நாளை மறுதினம் 11ஆம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையும் மறுநாள் 12 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் இடம்பெறவுள்ளது. (ச)

## மண்டலாபிஷேக நிறைவு நாள் உற்சவம்

யாழ்ப்பாணம், மே 9

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, மண்டலாபிஷேக நிறைவு நாள் உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்றுத் தொடர்ந்து துர்க்காதேவி உள்வீதி, வெளிவீதி உலா வரும் திருக்காட்சியும் இடம்பெறும். (ப-66)

## 101 ஆம் ஆண்டு பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 9

சைவபரிபாலனசபையின் 101 ஆவது ஆண்டு பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் சபை ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளது. சபையின் ஆயுள் கால அங்கத்தவர்கள் கலந்துகொள்ளுமாறும் கூட்டத்துக்கான ஆவணங்கள் கிடைக்கப்பெறாவிட்டால் அதனை சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

## மகப்பேற்று விடுதிகள் திறப்பு நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், மே 9

புகழ்பெற்ற மகப்பேற்று மருத்துவர் கெங்கம்மாவின் ஞாபகார்த்தமாக புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று மருத்துவ, சத்திரசிகிச்சை விடுதிகளின் திறப்பு நிகழ்வு நாளை 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இணுவிலிலுள்ள மக்லியோட் மருத்துவமனையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக மகப்பேற்று மருத்துவ நிபுணர்களான ஜெ.கஜேந்திரன், என்.சரவணபவ, வை.சிவாகரன், ஆர். துவாரதீபன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி பத்மதயாளன், சத்திரசிகிச்சை நிபுணர் பேராசிரியர் எஸ்.ரவிராஜ் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எத்தனை காலம் தான்...?

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளு மன்றத்தில் தெரிவித்த விடயங்கள், அவர் தமிழ் மக்களை அடி முட்டாள்கள் என்று கருதுகின்றாரா என்ற எண்ணத்தையே ஏற்படுத்தியிருக்கின் றது.'போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளகப் பொறி முறை மூலமாக சரியான நீதி கிடைக்காது என்பதற்கு போர் முடிவடைந்த இந்த 15 வருட காலமாக எதுவுமே நடக்காமல் இருப்பதே சான்றாக உள்ளது. எந்த நீதி விசாரணையாக இருந்தாலும் அது சுயாதீன விசாரணையாக இருக்கவேண்டும். சுயாதீன விசாரணையாக இருந்தால் இந்தச் சந்தர்ப்பத்தில் அது சர்வதேச விசாரணையாகவே இருக்கமுடியும். போரிட்ட இரண்டு தரப்புகளில் ஒன்று அரச தரப்பு. போரிட்ட ஒரு தரப்பினரே விசாரணை நடத்துவது சுயாதீன விசர்ரணையாக இருக்காது' என்று சுமந்திரன்எம்.பி. தனதுஉரையில்குறிப்பிட்டிருந்தார்.

வேடிக்கை என்னவென்றால், தமிழ்த் தரப்புகள் தொடர்ச்சியாக சர்வதேச விசாரணை ஊடாகவே நீதியை நிலைநாட்டமுடியும் என்று வலியுறுத் திக்கொண்டிருக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தனும், நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் மட்டுமே, கலப்புப் பொறிமுறைக்கு இணங்கியிருந்ததுடன் சர்வதேச விசாரணை முடிவடைந்து விட்டது எனத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தனர். இலங்கையின் இறுதிப்போரில் நடந்தவை தொடர் பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவல கத்தால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையை சர்வதேச விசாரணையாக காண்பித்து, இலங்கை அரசாங்கத்தை நல்லாட்சியை பிணையெடுத்துக் கொண்டிருந்தவர்கள் சம்பந்தனும் சுமந்திரனும் மாத்திரமே. அவர்களது கட்சியிலேயே இவர்கள் இருவரையும் தவிர ஏனையோரும் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை முன்வைத்த போதும், அதனையும் உதாசீனம் செய்து கலப்புப் பொறிமுறைக்கு இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து இணங்கியவர்கள் சம்பந்தனும் - சுமந்திரனும். கலப்புப்பொறிமுறை என்பது இலங்கை அரசாங் கத்தையும் உள்ளடக்கியது. இதைச்சொல்லும்போது போரில் ஈடுபட்ட ஒரு தரப்பை எப்படி விசாரணைப் பொறிமுறைக்குள் உள்ளீர்க்கலாம் என்று எண்ணத் தோன்றவில்லையா? அல்லது அன்று சுயாதீன விசாரணை நடைபெறக்கூடாது என்பதற்காக சுமந்திரன் - சம்பந்தன் இணை கலப்புப் பொறி முறைக்கு இணங்கியதா?

இலங்கை விவகாரத்தை மேற்குலக நாடுகள் தங்களின் தேவைக்காகவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வைத்திருக்கின்றன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஊடாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்ல முடியாது என்ற பாலர்பாடம் சுமந்திரன் - சம்பந்தன் இணைக்குத் தெரிந்திருந்தும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டு செல்வதை விடுத்து மீண்டும் மீண்டும் மனித உரிமைகள் பேரவையில் முடக்கி வைத்திருந்தார்கள். காலத்தைக் கடத்தும் இலங்கை அரசாங்கத்துக்கு உடந்தையாக இருந்தார்கள். எல்லாவற்றையும் சீரழித்த பின்னர் இப்போது எதுவுமே தெரியாததைப்போல சர்வதேச விசாரணையே தீர்வு என்று கூச்சலிடுவது எந்தவகையில் நியாயம்? தமிழ் மக்களை எதையும் சொல்லி ஏமாற்றலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நினைக்கின்றாரா? இல்லையேல் இப்போதும் மேற்குநாடுகளின் தாளத்துக்கு ஆடுவதற்காக இந்தக் கதையைச் சொல்கின்றாரா? தமிழ் மக்களுக்கு நடந்த கொடுமைகளை உணராதவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி யதன் விளைவை தமிழ் மக்கள் அனுபவிக்கத் தான் வேண்டும்.





# மீள் மின்னிணைப்பு 90 நாளே அவகாசம்!

கொழும்பு, மே 9

**மின்விநியோகம் துண்டிக்கப்பட்டு 90 நாள்களுக்குள் நிலுவைக் கட்டணத்தை செலுத்தி மீள் இணைப்பைப் பெற்றுக்கொள்ளா விடின், மின்விநியோகம் முழுமையாகத் துண்டிக்கப்பட்டு, மின்பாவ னைக்கான கணக்கும் இரத்துச் செய்யப்படும் - இவ்வாறு மின்சாரத் துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நாடாளு மன்றில் தெரிவித்தார்.**

"ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து மின்கட்டமைப் பில் கொள்கை ரீதியில் மாற்றம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. சிவப்பு எச்சரிக்கை கட்டணப் படி வம் விநியோகிக்கப்பட்டு நிலுவைக் கட்டணம் செலுத்தாத சுமார் 10 இலட்சம் மின்பாவனை யாளர்களுக்கானமின்விநியோகம்துண்டிக்கப் பட்டுள்ளது. சிவப்பு எச்சரிக்கை கட்டணப் படி வம் வழங்கப்பட்டு,கட்டணம் செலுத்துவதற்கு காலஅவகாசம் வழங்கப்படும். அந்தக் காலப் பகுதிக்குள் கட்டணத்தை செலுத்தாவிடின் தான் மின் விநியோகம் துண்டிக்கப்படும்" என் றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# நவீன விவசாய மேம்பாடு 100 மில். டொலர் முதலீடு

கொழும்பு, மே 9

இலங்கையில் விவசாயத்துக்கான நவீன தொழில்நுட்பத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க போர்த் துக்கேய நிறுவனமொன்று 100 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. நிலைபேறான விவ சாய முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையில் உள்ள கிராமப்புற சமூகங்களின் விவசாயத்தை மேம்படுத்து வதை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது. (ச-இ)

# கைதிகள் இருவர் உயிரிழப்பு

கொழும்புமகசின்சிறைச் சாலையில்தடுத்து வைக் கப்பட்டிருந்த இரண்டு கைதிகள் உயிரிழந்துள் ளனர்.

வீட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட பன்றி இறைச்சி உணவில் ஏற்பட்ட ஒவ் வாமையால் அவர்கள் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளி யிடப்பட்டுள்ளது. (ச-இ)

# நாட்டில் அதிகரிக்கும் சிறுநீரக நோயாளர்!

கொழும்பு, மே 9

இலங்கையில் ஆண்டுதோறும் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது என்று சுகாதார அமைச்சர் மருத் துவர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் நாட்டில் சிறுநீரக நோயா ளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரம் வரை அதி கரித்துச் செல்கின்றது. கடந்த 2015 ஆம் ஆண்டில் 30ஆயிரத்து 657 ஆகக் காணப் பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் 72ஆயிரத்து 546 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் நாடாளு மன்றில் குறிப்பிட்டார். (ச-இ)

# கல்வித்துறை டிஜிற்றல்: சீனா உதவி வழங்கும்

கொழும்பு, மே 9

இலங்கையின் கல்வித்துறையை டிஜிற்றல் மயமாக்குவதற்கு சீனா உறுதிய ளித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் டிஜிற்றல் வகுப்பறைகள் மற்றும் தேவை யான உபகரணங்கள், மேசைகள், ஸ்ரூடியோ வசதிகள், மாநாட்டு வசதிகள் என்பவற்றையும் ஏற்படுத்திக்கொடுக்க சீனா முன்வந்துள்ளது.

அத்துடன் பொருத்தமான விசேட தரம் வாய்ந்த ஆசிரியர்கள், வளங்கள் என்ப வற்றையும் சீனா வழங்கவுள்ளது. (ஒ-6)

**நாளை**

10.05.2024

**வெள்ளிக்கிழமை**

**சித்திரை - 27**

சுபநேரம் : 05.54 - 07.24
ராகுகாலம் : 10.24 - 11.54

அக்ஷயதிருதியை

**நாளொரு நல்வார்த்தை**

**ஓங்கி அடிப்பது எளிய செயல்
ஆனால் அடிக்காமல் அமைதி காப்பது,
மிகக் கடினமானது.**

**விவேகானந்தர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வத்தை அள்ளித் தரும் அட்சய திருதியை

சித்திரை மாதம் வளர்பிறையில் வரும் திருதியை 'அட்சய திருதியை' என்று அழைக்கப்படுகிறது. அட்சயம் என்றால் வளர்வது; பெருகுவது என்று அர்த்தம். அப்படியாக அட்சய திருதியை அன்று நாம் என்ன பொருள் வாங்கினாலும் அந்தப் பொருள் மிகவும்பெருகி வளம் சேர்க்கும். குறைவில்லாத செல்வத்தை அள்ளித் தரும் திருநாளாக அட்சய திருதியை போற்றப்படுகிறது.

**சிறப்புகள்:**

தர்மர் சூரிய பகவானை வேண்டி அட்சய பாத்திரம் பெற்றதும், மணி மேகலை அட்சய பாத்திரம் பெற்றதும், இவ்வளவு ஏன் சிவபெருமான் அன்னபூரணித் தாயாரிடம் தனது பிச்சைப் பாத்திரம் நிரம்பும் அளவு உணவைப் பெற்றதும் இந் நாளில் தான். பகவான் பரசுராமர் அவதரித்த நாள், புனித நதி கங்கை பூமியை தொட்ட நாள், குசேலர் கிருஷ்ண பகவானை சந்தித்த நாள், ஆதி சங்கரர் செல்வத்தை கொட்டிக் கொடுக்கும் ஸ்லோகமாகிய கனகதாரா ஸ்தோத்திரத்தை இயற்றிய நாள், குபேரன் இழந்த செல்வங்களை மீட்ட நாள், திரேதா யுகம் ஆரம்பமான நாள், வியாசர் மஹா பாரதம் எழுத ஆரம்பித்த நாள்.

**செய்ய வேண்டியவை:**

இந்த நாளில் தங்கம் மட்டுமன்றி உப்பு, அரிசி, ஆடைகள் மற்றும் விலை உயர்ந்த எந்தவொரு பொருளை வாங்கினாலும் அது பலமடங்கு பெருகும் என்பது ஐதீகம். புதிய தொழில் தொடங்கலாம். பூமி பூஜை செய்வதற்கு உகந்த நாள். ஏழைகளுக்கு தானம் செய்யலாம். பிதுர்க்களுக்கு தர்ப்பணம் செய்யலாம். அப்படி செய்வதன் மூலம் அவர்களது ஆசீர்வாதம் பெற்று சிறப்பாக வாழலாம்.

**விரதம் இருக்கும் முறை:**

அட்சய திருதியை நாளன்று விடியும் முன் எழுந்து சுத்தமாக நீராடி, பூஜை அறையை சுத்தம் செய்து விளக்கேற்றி கோலம் போட்டு அதன் மீது ஒரு பலகையை வைக்கவும். பின் பலகையின் மீது கோலம் போட்டு ஒரு சொம்பில் சந்தன கும்குமம் இட்டு அதில் நீரை நிரப்பி அதன் மீது பெரிய தேங்காயை வைத்து மாவிலைகளை அதனைச் சுற்றி அதுக்கி கலசம் போல் தயார் செய்ய வேண்டும். பின் அந்த கலசத்தின் அருகில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்து, அதன் அருகில் புதிதாக வாங்கிய பொன், பொருள்களை வைத்து, பூ போட்டு பூஜை செய்ய வேண்டும். பிறகு அதற்கு கற்பூர தீபாராதனைக் காட்டி வணங்கினால் வளமான செல்வம் பெருகும்.

அந்த நாளில் ஏழைகளுக்கு அன்னதானம் செய்யலாம். உணவு, வஸ்திரம் போன்றவற்றை தானமாக வழங்கலாம். பசுவுக்கு கீரை வகைகளை வழங்கலாம். இந்நாளில் அன்னதானம் செய்வது மிகப் பெரிய புண்ணியமாக கருதப்படுகிறது. இந்த அட்சய திருதியை தினத்தன்று வெண்மை நிறப் பொருள்கள் விசேஷமானது ஆகும். வெண்ணிற மல்லி பூ, வெண்பட்டு ஆடை, வெண்ணிற பால் பாயசம் இவைகளைப் பயன்படுத்துதல் சிறப்பாகும். அட்சய திருதியை நாளில் தங்கம்தான் வாங்க வேண்டும் என்று நினைக்கவேண்டாம். வசதி உள்ளவர்கள் வாங்கலாம். வசதி இல்லாதவர்கள் உப்பு, மஞ்சள், நெல், அரிசி ஆகியவற்றை வாங்கி லட்சுமி படத்துக்கு முன் வைத்து வழிபடலாம்.

**அட்சய திருதியை அன்று தங்கம் வாங்குபவர்கள் உடனே அதை அணிந்து கொள்வது தவறு. தங்கம் வாங்கியவர்கள் பெரியவர்கள் கையால் அர்ச்சனை செய்த பிறகே அணிய வேண்டும். இல்லையேல் வறுமை பீடிக்கும் என கூறப்படுகிறது.**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அட்சய திருதியை நாளில் செய்யக்கூடாதவை



- அட்சய திருதியை அன்று செல்வத்தின் தெய்வமான மகாலக்சுமியையும், மகா விஷ்ணுவையும் வணங்கினால் நல்ல பலன்கள் கிடைக்கும். ஆனாலும் அட்சய திருதியை நாளில் தவறுதலாகக் கூட சில காரியங்களை செய்யக்கூடாது. அந்த விஷயங்களை தெரிந்துகொள்ளுங்கள்.

- மகாலட்சுமிக்கு துளசி இலைகளை சமர்ப்பிக்கக் கூடாது என்பது ஐதீகம். இதனால் லட்சுமிக்கு கோபம் வரும் எனச் சொல்லப்படுகிறது.

- அட்சய திருதியை நாளில் யாரையும் அவமரியாதை செய்யக்கூடாது. உங்கள் எண்ணங்களும், நடத்தையும் யார் மரியாதைக்கும் பாதிப்பு உண்டாக்கக் கூடாது.

- அட்சய திருதியை நாளில், பூசையறை, வீடு, ஈசானி மூலை, கதவுகள், ஜன்னல்களை சுத்தம் செய்ய வேண்டும். அவற்றை அழுக்காக வைக்காதீர்கள். மகாலட்சுமி அழுக்கான இடங்களில் வாசம் செய்வதில்லை.

- அட்சய திருதியை நாளில் கடன் கொடுக்கக்கூடாது.

- புராணங்களில் கூறியுள்ள படி, அட்சய திரிதியை அன்று வீட்டின் எந்த அறையையும் இருளில் விடக் கூடாது.




கஞ்சிரா ஜுவல்ஸ்
அக்ஷய திருதியை 10.05.2024
நாளை (10.05.2024) அக்ஷய திருதியையில் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பெருமதிமிக்க அன்பளிப்பு பொருட்கள் காத்திருக்கின்றன.
WE CERTIFY KARAT OF GOLD
இல.99E, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 362 096 9 021 222 444 8

கண்கவர் தங்க நகைகளின் சாம்ராஜ்யம்
பூரணி நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
அக்ஷய திருதியை 10.05.2024



1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 3121

50 வருடங்களுக்கு மேலாக யாழ் குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைபெற்ற உங்கள் அபிமான
அக்ஷய திருதியை நாளை 10.05.2024
மைதிலி நகைமாடம்
(தனியார்) நிறுவனம்






அட்சய திதி தினத்தன்று நகைகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

சித்திரை மாதம் சுக்லபட்ச திருதியை அக்ஷய திருதியை நாளாகக் கொண்டாடுவது யாவரும் அறிந்த ஒன்று. அக்ஷய திருதியை அன்று நாம் செய்யும் எந்தக் காரியமும் வளர்ந்து கொண்டே இருக்கும். பெருகிக் கொண்டேயிருக்கும் என்பது திண்ணம். இத்தகைய சிறப்பு மிக்க **அக்ஷய திருதியை தினத்தன்று** எமது வாழ்வின் தேவைகளில் ஒன்றாக விளங்கும் தங்கத்தை தங்களின் வசதிக்கேற்ப பெரியதோ, சிறியதோ வாங்கி உங்கள் வாழ்க்கையை செல்வச் செழிப்பாக்குங்கள்.

Maithily Nagai Maadam (Pvt) Ltd
மாறாத தங்க நகைகளுக்கு வரம்போல் ஓர் இடம்
யாழ் மைதிலி ஜுவெல்லர்ஸ்
89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7902
79 Z, Sea Street, Colombo-11. Tel: 011 239 6239.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழவேந்தனுக்கு இறுதி வணக்கம்

யாழ்ப்பாணம், மே 8

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், ஈழத்தமிழின விடுதலைக்காகப் பாடுபட்டவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மா.க.ஈழவேந்தனின் இறுதி வணக்க நிகழ்வு யாழ்.கொக்குவில் அமைந்துள்ள தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் அலுவலகத்தில், கடந்த ஞாயிற்றுக் கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் மகளிர் அணித் தலைவி திருமதி.வாசுகி சுதாகரன், செயலாளர் திருமதி.கிருபா கிரிதரன், அரசியல் விமர்சகர் மு.ஈழத்தமிழ்மணி, கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் என்.இன்பம் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ,66)



அனலைதீவு அருணோதயா முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா கடந்த வியாழக்கிழமை முன்பள்ளி முன்றலில் இடம்பெற்றது. (ச-9-555)



வடமாகாண திணைக்களத்தின் ஏற்பாட்டில், வவுனியா மாவட்ட செயலகத்தினால், மாவட்டங்களுக்கிடையிலான கயிறு இழுத்தல் போட்டிகள் வவுனியா வைரவபுளியங்குளம் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டன.

ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை வவுனியாவும், இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணமும், மூன்றாம் இடத்தை மன்னாரும் பெற்றுக்கொண்டன. பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை யாழ்ப்பாணமும், இரண்டாம் இடத்தை கிளிநொச்சியும், மூன்றாம் இடத்தை வவுனியாவும் பெற்றுக்கொண்டன. (213)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இல. 30,32 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். / Kasthuriyar Road, Jaffna.
021 222 5511
077 224 5511
newlalithas2014@gmail.com
New Lalithas Jewellery



# சஞ்சிகை வெளியீடும் கலைஞர்கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,மே 8

முத்தமிழ்சங்கத்தின் 'யோகம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் கலைஞர் கௌரவிப்பும் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் க.துஸ்யந்தன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நூலின் முதற்பிரதியை கலாநிதி ந.பிரதீபராஜா பெற்றுக்கொணாடார். நிகழ்வில் நாட்டார் இசைக்கலைஞர்கள் மூவர் முத்தமிழ் சங்கத்தால் 'கலைச்சிகரம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ச)



நானாட்டான் வர்த்தகர் சங்கமும் முருங்கன் பொலிஸ் நிலையமும் இணைந்து, நானாட்டான் சுற்றுவட்டப் பகுதி மற்றும் கடைத் தெருக்களில் சிரமதானப் பணியை கடந்த சனிக்கிழமை மேற்கொண்டன. சிரமதானப் பணியில் முருங்கன் பொலிஸார், நானாட்டான் வர்த்தகர்கள், உயிலங்குளம் 542 பிரிவு இராணுவத்தினர், நானாட்டான் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-213)

# சின்னம் சூட்டல்

யாழ்ப்பாணம்,மே 8

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவ தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி பணிப்பாளர் ஐ.தேவஈஸ்வரன் பங்கேற்றார். (ச-9)





சர்வதேச உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் முன்னெடுக்கப்பட்டது. (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் வன்னியசேகரம்

(முன்னாள் வலி தென் மேற்கு பிரதேச சபை உறுப்பினர்)

தோற்றம் 30 . 01 . 1960



மறைவு 06 . 05 . 2024

நவாலி வடக்கு கற்கேணியடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் வன்னியசேகரம் அவர்கள் 06.05.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2024) வியாழக்கிழமை 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 444) V-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 09 . 01 . 1949



ஆண்டவன் அடியில் 11 . 04 . 2024

### இராசநாயகி இந்திரன்

திதி திருதியை

சுன்னாகம் மயிலணிப் பதியினைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை 24/1, பிரான்சிஸ் வீதியை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், இந்திரன் அவர்களின் பிரியமுள்ள மனைவியும், கௌரிபாலன், அபிராமி ஆகியோரின் அன்புத் தாயாருமான, இராசநாயகி இந்திரன் அவர்கள் கடந்த 11.04.2024 வியாழக்கிழமை சிவபதமடைந்தார். எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு அமரத்துவமடைந்த 31ம் நாளில் அவரின் பிரிவால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் உறவுகளாகிய நாம் அவரை அன்புடன் நினைவுகூர்கின்றோம்.

எனது ஆருயிர் துணைவியே!
எமது பாசமிகு அன்னையே!
கருணைநிறைந்த மாமியே!
உதிரத்தால் ஒன்றுபட்டு உறவாடிய எமதருமை சகோதரியே!
எமது நேசமுள்ள மைத்துனியே!
எமை அன்புடன் அரவணைத்த இராசியே!
அன்ரியே! மாமியே! பெரியம்மாவே!
கருணையுள்ள அம்மம்மாவே, அப்பம்மாவே, பாட்டியே!

பண்புடனும் பாசத்துடனும் எம் எல்லோரையும் அன்புடன் அரவணைத்த எமது அன்புத் தெய்வமே எமைத் தவிக்கவிட்டு விண்ணகம் சென்றீர்களோ. நீங்கள் இன்று எம்முடன் இல்லை என்பதனை எம்மால் நம்பமுடியவில்லை. நீங்கள் எப்போதும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். என்றும் உங்கள் நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய மயிலணி கந்தனினதும் வரிசப்புலத்து மகாமாரி அம்பாளினதும் பாதாரவிந்தத்தினைத் தொழுது நிற்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகளும், வீட்டுக்கிருத்தியங்களும் நாளை (10.05.2024) வெள்ளிக் கிழமை கொழும்பில் நடைபெறும். நாளை மறுநாள் (11.05.2024) சனிக்கிழமை வெள்ளவத்தை தமிழ் சங்கத்தில் காலை 11:00 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் சகல விதத்திலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், ஆறுதல் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

077 177 7606
076 967 4206

(CS/54992) J-

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 09 . 1952



மறைவு 08 . 05 . 2024

### நாகராசா மகாலட்சுமி

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா மகாலட்சுமி அவர்கள் நேற்று (08.05.2024) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற தம்பிராசா - சிவக்கொழுந்து தம்பதியரின் இளைய மருமகளும், தம்பிராசா நாகராசாவின் (முன்னாள் விற்பனைத் திணைக்கள முகாமையாளர்) அன்பு மனைவியும், பகீர்தன் (கனடா), சுதர்ஜினி (ஜேர்மனி), துவாகரன் (இலங்கை மின்சார சபை, சாவகச்சேரி), பார்த்திபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யசோதரா (கனடா), தவலிங்கம் (ஜேர்மனி), சாந்தினி (பிரதேச செயலகம், சாவகச்சேரி), மகிந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தஸ்மின், தஸ்மி (கனடா), விந்தியா, திசான், திருஷாந் (ஜேர்மனி), கனிஷ்கா, ஆதீஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், புஷ்பமலர், விக்கினேஸ்வரராசா (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும், சுப்பிரமணியம், வள்ளியம்மை, மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2024) வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42400) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 04 . 1968



மறைவு 03 . 05 . 2024

### திருமதி பானுமதி தேவராஜ்

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இங்கிலாந்து ஹரோ (Harrow) மற்றும் வேல்ஸ் Swansea நகரை வதிவிடமாகவும் கொண்ட பானுமதி தேவராஜ் கடந்த 03.05.2024 வெள்ளிக்கிழமை ஜேர்மனி ஸ்டுட்கார்ட்டில் (Stuttgart) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - மேரிஜோசெப்பின் தம்பதியரின் மருமகளும், தேவராஜ் (Dolmetscher) அவர்களின் பாசமிகு மனைவியும், திரிஷாவின் (தாரகா) அன்பு தாயாரும், காலஞ்சென்றவர்களான செவ்வந்திராஜா, இன்பமலர் மற்றும் செவ்வந்திமலர் (கலா), சுகுமார் ஆகியோரின் அன்புச்சகோதரியும், இந்திராதேவி, கமலராணி, ரவீந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும், வைஷ்ணவி, யாழினி ஆகியோரின் அன்புச் சித்தியும், சுஜித்தா, சிவோதயன், மகிழன், குணாளன், அங்கயன் ஆகியோரின் அன்பு மாமியும், விஷ்ணு, ரிஷி, அர்ஜுன், ஸ்ரீஜன், ஸ்ரீஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2024) வெள்ளிக்கிழமை காலை 10:00 - 13:00 Ramsaier Bestattung, Katzenbachstr 58, 70563 Stuttgart (Vaihingen) Germany இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
தேவராஜ்: +49 152 149 45800 (Germany), கலா : +44 747 429 0974 (London)
சுகுமார் : +94 777 159 514 (Sri Lanka), ரவி : +44 786 506 8554 (London)

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/54986) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம். மே 9

வடமராட்சி உதை பந்தாட்ட சிரேஷ்ட சங்கமானது 40 வய துக்குட்பட்டோருக்கான, உதைபந்தாட்டப்போட்டியை மேம்படுத்துவதற்காக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளை நடத்திவருகின்றது. வடமராட்சி உதை பந்தாட்ட சிரேஷ்ட சங்கத்தில் பதிவு செய்த (புதுப்பித்தல்) மற்றும் பதிவு செய்யாத வடமராட்சி பிரதேசத்துக் குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் குறித்த சங்கத்தில் பதிவுசெய்யுமாறு கேட்டுள்ளனர். மேலதிக விவரங்களுக்கு 076 853 1257 மற்றும் 077 7286315 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (ப)

## யாழ்ப்பாண வாசி நோர்வேயில் சாவு

நோர்வே நாட்டில் குடும்பத்துடன்வசித்து வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காரில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இரண்டு பிள்ளைகளின் தந்தையான அரசரத்தினம் துஷ்யந்தன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட் டுள்ளார். இந்தச் சம்பவம் கொலையா? உயிர்மாய்ப்பா? என்ற கோணத்தில் அந்த நாட்டுப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (ச-555)

**மாதகல் கலைஞர்கள் அறிமுகம்**

தங்களது திறமைகளை மாதகலில் இடம்பெறும் நிகழ்வில் அரங்கேற்ற வாய்ப்பு. தம்மால் வெளிப்படுத்தக்கூடிய கலைத் திறமைகளைக் குறிப்பிட்டு

**070 344 5441 / 077 738 4415**

என்ற இலக்கங்களில் பெயர்களைப் பதிவுசெய்யுங்கள்

தகவல்: மாதகல்வாசி காசி. ஜீவலிங்கம்
மாதகல் கிழக்கு, மாதகல்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம் : 15.02.1952 மறைவு : 10.04.2024

வடமராட்சி பொலிகண்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் சின்னராசா சிவபாலசிங்கம்
(இளைப்பாறிய கிராமசேவை உத்தியோகத்தர்)

கடந்த 10.04.2024 அன்று பொலிகண்டி கந்தவனம் வன்னிமரத்து ஆறுமுக சுவாமியின் திருவடிகளை பற்றிப் பிடித்த அவர்களின் ஆத்மா சாந்தியடைய பொலிகண்டி கந்தவனப் பெருமானையும் மருதாம்புலம் பத்திரகாளி அம்பாளையும் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

கந்தவனம் கோவிலடி,
பொலிகண்டி.

ச. வைத்தியநாதக் குருக்கள்
குடும்பத்தினர்.

(cs.54298) (N-1)

## கண்ணீர் அஞ்சலி



சிறந்த சமூக சேவகரும், வலி கிழக்கு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளருமான
**திரு.க. தர்மலிங்கம் (J.P)** அவர்களின் அன்புத் துணைவியார்
**தர்மலிங்கம் கமலாதேவி**
அவர்கள் 06.05.2024 இறைபதமடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதலை வழங்குமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சு.பரமேஸ்வரன்
சமாதான நீதவான்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(CS/54994) J-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 08 04 1947



விண்ணில் 06 05 2024

### திருமதி நாகம்மா புவனேந்திரன்

யாழ்ப்பாணம், ஈவினை, புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த நாகம்மா புவனேந்திரன் அவர்கள் கடந்த (06.05.2024) திங்கட்கிழமை ஈவினையில் இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - உத்தமிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான நாவற்குழியைச் சேர்ந்த தம்பித்துரை - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற புவனேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை - சிவபாக்கியம் அவர்களின் அன்பு பெறாமகளும் நாகேஸ்வரன் (கனடா),முருகையா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தேவராணி,சோதிலட்சுமி ஆகியோரின் பாசமிகு மச்சாளும் பவளகேசன்,சத்தியவதி, ஹரிகரன்,நளாயினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரதீபா - ராஜானந்த், ஜனாதீபா - அரவிந்த்,பிரசாத்,ஜினிதா - அமுதாகரன்,சாலினி - லோஜானந்த், பாலமுரளி - சூசான் ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆரணி,ஆர்த்தி,அபிராமி, ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் மைரா,றியா,ஸ்ருதி,ஐரன்,ஆரவி,ஐலா,ஆதி, றய்லன்,சக்தி,சேரா ஆகியோரின் பாசமுள்ள அத்தைப்பாட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஈவினை விலங்கன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈவினை
புன்னாலைக்கட்டுவன்.

நாகேஸ்வரன்- +416 558 3372
முருகையா- +647 514 3747
சிவகுமார்- 0771 135249

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 03 . 1934



இறப்பு 07 . 05 . 2024

### நல்லதம்பி முருகேசு

யாழ். கட்டைவேலி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி முருகேசு நேற்று முன்தினம் (07.05.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பத்தினி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, வேலுப்பிள்ளை, கண்ணகை, கனகசபை, பொன்னம்மா, ஆகியோரின் சகோதரரும், இலட்சுமிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், இரத்தினகுமாரி (வசந்தி - கனடா), இலக்குமிகாந்தன் (கீத்தன் - பிரான்ஸ்), உதயகுமாரி (கிளி - கனடா), அமிர்தகுமாரி (பிரதேச செயலகம், கரவெட்டி), சுதாகரன் (தீபன் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவராசா (கனடா), ஞானேஸ்வரி (பிரான்ஸ்), புவனேந்திரன் (கனடா), கிரிதரன் (கொலன்ட்), அனித்தா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவேதன், நிலானி, அபிஷன், சோபிகா (கனடா), லக்ஷாயினி, ராகுல், ஜனனி (பிரான்ஸ்), சஸ்மிரா, சஞ்சனா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2024) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேதக்களி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
**021 205 6500, 077 731 0542**

(CS/54990) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையின் உள்ளக வீதி புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 9

பளை பிரதேச மருத்துவமனையின் உள்ளக வீதி பல வருடங்களாக குண்டும் குழியுமாகக் காணப்படுவதால், மழை காலங்களில் மருத்துவமனைக்குச் செல்லும் மக்களும் நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பல சமூக மட்ட அமைப்புகள் மற்றும் உரிய திணைக்களங்கள் இருந்தும் இதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என நோயாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால், நோயாளர்களை அம்புலன்ஸில் கொண்டு செல்வதற்கு மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதால் உள்ளக வீதியைப் புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்கவேண்டும் என நோயாளிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ப-159)


## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வயதான அம்மாவை பராமரிப்பதற்கு **வீட்டுப் பணிப்பெண் தேவை.** கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(CR/42399) J-1

**076 731 1829**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொக்குவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு **வீட்டு வேலை செய்வதற்கு** 35 - 50 வயதுக்கு உட்பட்ட **பெண் பணியாளர் தேவை.**

(CS/54987) J-1

**077 297 9960**


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 08.11.1939 மறைவு 07.05.2024

அன்பு நண்பன்
**விவிந்தன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**சோமசுந்தரம் பரமசிவராசா**
அவர்கள் கடந்த 07.05.2024 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்
**சிறி மீனாட்சி நகை அகம்**

(CR/42387) J-1

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் . 02 . 08 . 1942



ஆண்டவன் அடியில் . 08 . 05 . 2024

### கனகேந்திரம் பொன்னுத்துரை

நவாலியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகேந்திரம் பொன்னுத்துரை அவர்கள் நேற்று (08.05.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகேந்திரம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ராஜப்பு - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரிபூரணம் அவர்களின் பாசமிகு கணவரும், தர்ஷினி (ஹொலண்ட்), ஜூட் சுதர்சன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான ஜூட் கஷன், ஜூலி சுதர்ஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ், ராதிகா ஆகியோரின் மாமனாரும், அஷேர், ஜோய்சி, ஜேய்ஸ், ஏசாந்த் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், நாகேஸ்வரி மற்றும் செல்லத்துரை, பொன்மணி, இராசதுரை, காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் இராசலிங்கம், காலஞ்சென்ற புனிதராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிசிலியா, ரஞ்சிதமலர், லூயிஸ் ஞானசேகரம், ஞானமலர், ஜெகமலர், ரதிமலர், செல்வமலர், ஜெகசேகரம், பிரான்சிஸ் குணசேகரம், ரெஜினா குணமலர், டொனால்ட் விஜயசேகரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மல்லாகம் புதுமை மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்துக்காக மல்லாகம் குளமங்கால் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 28545) S-1

தேவாலய வீதி, மல்லாகம்.

077 459 4977 - மனைவி
+41791923112 - மகன்

தகவல்: குடும்பத்தினர்.

## வட இலங்கைச் சங்கீத சபை

### பரீட்சைகள் - 2024

வட இலங்கைச் சங்கீத சபையின் 2024 ஆண்டுக்கான 1,2,3,4,5,6 ஆகிய தரங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் மற்றும் அறிமுறைப் பரீட்சைகளுக்குரிய நேரசூசி, அனுமதி அட்டைகள் யாவும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சைகள்யாவும் கீழ் குறிப்பிடப்படும் தினங்களில் நடைபெறும்.

**செயன்முறைப் பரீட்சைகள் - மே மாதம் 18, 19, 23, 24, 25, 26 ஆம் திகதிகள்**

**அறிமுறைப் பரீட்சைகள் - யூன் மாதம் 08, 09 ஆம் திகதிகள்**

**குறிப்பு :** தரம் 5,6 (பரதம், சங்கீதம்) கொழும்பு மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சைகள் யூன் 15 ஆம் திகதி முதல் நடைபெறும்.

**பொ.ரவிச்சந்திரன்**
**தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை**
**மருதனார்மடம் -'சுன்னாகம்.**

(CR/42381) J-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 . 08 . 1937



மறைவு 10 . 04 . 2024

### சபாரத்தினம் சண்முகம்

(இளைப்பாறிய அதிபர்)

புதுக்குடியிருப்பு / முல்லைத்தீவு

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் எங்களுக்கு நல் வாழ்க்கை அமைத்துக்கொடுத்து இன்று எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி விண்ணுலகு சென்ற எம் குடும்பத் தலைவர் சபாரத்தினம் சண்முகம் அவர்களின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் எமது துயரில் பங்குகொண்ட உறவினர்கள், நண்பர்கள் அயலவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். கடந்த செவ்வாய்க்கிழமை (07.05.2024) புதுக்குடியிருப்பில் அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக் கூட்டத்தை ஒழுங்கு அமைத்தவர்களுக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அஸ்தி நேற்று (08.05.2024) புதன்கிழமை புதுக்குடியிருப்பு கடற்கரையில் கரைக்கப்பட்டது வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.05.2024) கண்டியில் அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்

பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்**

உமா வாசம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

57, பலகொல்ல கெங்கல்ல, கண்டி.

(cr42389) (N-1)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாரம்பரிய விளையாட்டுப்போட்டி

துணுக்காய் பிரதேச செயலக சமுர்த்தி வங்கியால் புத்தாண்டு விளையாட்டுவிழா நிகழ்வு மல்லாவி அனிஞ்சியன் குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நேற்று புதன்கிழமை நடத்தப்பட்டது. துணுக்காய் பிரதேச செயலகசமுர்த்திமுகாமையாளர் திருமதி வீ. சுஜிதா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.நித்தியா, சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகள் மற்றும் கிராமமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஒ-35)

## வீதி புனரமைப்பு

யாழ்ப்., மே 9

வடமாகாணசபையின் முத்திரைத் தீர்வையில் கிடைக்கப் பெற்ற 6.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஜே/ 320 கிராம அலுவலர் பிரிவின் மயான வீதி திருத்தம் செய்யப்படவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் கொடிகாமத்தில் அமைந்துள்ள அண்ணமார் கோவிலடியில் கடந்த வாரம் இடம்பெற்றது

நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது, ஒருவீதிஅமைப்பதற்கு 22 அடி அகலம் கொண்ட இடப்பரப்பு தேவைப்படும். அதற்கான இடத்தை காணி உரிமையாளர்கள் விட்டுத்தரா விட்டால், முத்திரைத் தீர்வையில் கிடைக்கப் பெற்ற நிதி வேறு இடத்துக்கு மாற்றம் செய்யப்படும் எனசாவகச்சேரிபிரதேசசபை உத்தியோகத்தர்களால் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-59)

## அதிக நேர தூக்கம் இலங்கை மூன்றாமிடம்

அதிக நேரம் தூங்கும் நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளதாகத் தெரியவந்துள்ளது. உலகில் உள்ள 60 நாடுகளின் சராசரி தூக்கத்தின் அளவைப் பார்த்து, உலகில் எந்த இடத்தில் மக்கள் ஓர் இரவில் அதிகளவு தூங்குகிறார்கள் என்பதைக் கண்டறிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின்படி, தரவரிசையில் 12 மணிநேரத்துடன் பல்கேரியா முதலிடத்திலும் இரண்டாவது இடத்தில் அகோலாவும் மூன்றாமிடத்தில் இலங்கையும் பதிவாகியுள்ளது.

(ச-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 11 . 1934



மறைவு 07 . 05 . 2024

### திருமதி தவமணி அம்பலவாணர் (மீனா அக்கா)

திருநெல்வேலி தெற்கு சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி அம்பலவாணர் அவர்கள் கடந்த (07.05.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் வெற்றிவேலு - அன்னபூரணி அம்மாள் தம்பதியரின் புதல்வியும், அமரர் மயில்வாகனம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், அமரர் அம்பலவாணர் அவர்களின் மனைவியும், விமலதாஸ் (தகவல் தொழில்நுட்பப் பூங்கா யாழ்.) அவர்களின் அன்புத் தாயாரும், சுமதி (ஆசிரியை, யா/செங்குந்த இந்துக் கல்லூரி) அவர்களின் மாமியாரும், ஆரூரனின் பேர்த்தியும், சௌந்தரநாயகி, அமரர் சடாச்சரம், சிவகாமி அம்மை, விக்னேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும், பத்மநாதன், கணேசநாதன், சயந்தநாதன், நரேந்திரநாதன், கலைவாணி ஆகியோரின் சிறிய தாயாரும், செந்தூரன், அரவிந்தன், நித்தியவாணி, நித்தியவராகினி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2024) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் இல.85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக் காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
விமலதாஸ் (விமலன்) மகன்
077 3144 595

(CS 445) A-1

## 31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 11 . 02 . 1944



இறப்பு 09 . 04 . 2024

### பரமேஸ்வரி அன்ரனி

(உப அதிபர் யா/ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை)

அன்பாலே அரவணைத்த - அன்னையே
ஆறுதல் தந்திட்டீரே - ஆனால் இன்று உங்களை
இழந்திட்ட சோகம் தீராதோ
ஈசனுடன் சேர்ந்திட்டீரோ
உறவுகளை மறந்தும்
ஊராரை மறந்தும்
எம் அனைவரையும் - விட்டுச் சென்றீரோ
ஏக்கமுடன் இருக்கின்றோமே! அனைவருமே
ஐயமுடன் வாழகின்றோமே
ஒவ்வொரு நாளும் பொழுதும்
ஓம் ரீவி பார்த்த உங்கள் - மனம்
அகிலமெல்லாம் ஆனதோ
நெஞ்சம் முழுதும்
எம் அன்னைக்கே சரணம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

44, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/54995) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 06 . 1942



மறைவு 07 . 05 . 2024

### கிட்டிணபிள்ளை நாகராசா

அச்சுவேலி பத்த மேனியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணபிள்ளை நாகராசா அவர்கள் (07.05.2024) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டிணபிள்ளை-பூரணம்மா தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீனிக்குட்டி தெய்வானை தம்பதியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாக்கியம் (பூபதி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி, மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இராசலலிதா, தர்மராசா (சுவிஸ்), செல்வகுமார் (பிரான்ஸ்), இராஜகுமாரி (கனடா), சுரேஸ்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஸ்ரீசத்தியநேசன் மற்றும் ஆனந்தகுமாரி, லிங்கவதி, ஜெயராசா, கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கஜதர்சன், நிதர்சன், மதுர்சன், மதுசா, சர்மினா, கஜானா, சஷ்வினி, தாரகி, ஐஸ்வினி லத்திகா, கவினேஷ் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, கந்தசாமி, பரமேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, கமலராணி, நவரத்தினம், காலஞ்சென்றவர்களான சிவபாதம், பிரபாகரன், ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.05.2024 வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று 10.00 மணியளவில் பத்தமேனி தீர்த்தாங்குளம், உல்லிவிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 4436) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 12 . 1945



மறைவு 08 . 05 . 2024

### கந்தசாமி இரத்தினம்

பலாலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி இரத்தினம் அவர்கள் நேற்று (08.05.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - கனகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கதிரவேலு, மார்க்கண்டு மற்றும் பாக்கியம், ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகலிங்கம் - பராசக்தி தம்பதியரின் மருமகனும், வசந்தமலரின் அன்புக் கணவரும், தனுஜன், அபர்ணா ஆகியோரின் பாசமிகு தந்தையும், துவாரகா, முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கர்ஷ்ணவி, லிஷாரா, தர்ஷ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2024) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 00447) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லக்னோ சுப்பர் ஜெயின்ட்ஸ்ஸை நேற்று

# கருணையே இல்லாமல் வீழ்த்திய ஹைதராபாத்

**ஹைதராபாத், மே 9**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் லக்னோ அணிக்கு கொஞ்சமேனும் வாய்ப்பை வழங்காமல் கருணை இன்றித் தோற்கடித்தது ஹைதராபாத்.**

முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணிக்கு ஆரம்ப வீரர் குயின்டன் டி ஹொக் 2 ஓட்டங்களுடனும், ஸ்ரொன்னிஸ் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். அணியின் தூண்களான இவர்களின் இழப்பால் நிதானத்தைக் கையிலெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார் ராகுல். ஆனால், அவர் அளவு கடந்த நிதானத்தை வெளிப்படுத்தினார். 33 பந்துகளை எதிர்கொண்டு 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ராகுல் ஆட்டமிழந்தார். குருனல் பாண்டியா 24 ஓட்டங்களைச் சேர்த்தாலும் இதற்காக அவர் 21 பந்துகளை எதிர்கொண்டார். நிக்கொலஸ் பூரன் மற்றும் படோனி இருவரும் இறுதிக்கட்டத்தில் அடித்தாடினார்கள். படோனி 30 பந்துகளில் 55 ஓட்டங்களையும், பூரன் 26 பந்துகளில் 48 ஓட்டங்களையும் சேர்க்க முடிவில் 165 என்ற கௌரவ நிலைக்குச் சென்றது லக்னோ.

ஆனால், இந்த ஓட்டங்கள் ஹைதராபாத் அணிக்கு யானைப் பசிக்கு சோளப்பொரி என்பதாகத்தான் அமைந்தது. அபிஷேக் சர்மா, ஹெட் இருவரும் இணைந்து அதிரடியில் மிரட்டியெடுத்தனர். வெறும் 6 ஓவர்களில் அதாவது பவர் பிளேயில் 105 ஓட்டங்களை ஹைதராபாத் எட்டியது. லக்னோ வீரர்கள் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்ளக்கூட ஹைதராபாத்தின் ஆரம்ப வீரர்கள் அனுமதிக்கவில்லை. முதல் 36 பந்துகளில் 21 பந்துகள் பவுண்டரியும் சிக்சர்களும்தான். அதிரடி தொடர 10 ஓவர்களை எட்டுவதற்குள், அதாவது சரியாக 9.4 ஓவர்களில் 165 என்ற இலக்கை எட்டி 10 விக்கெட்களால் வென்றது ஹைதராபாத். ஹெட் 30 பந்துகளில் 89 ஓட்டங்களையும், அபிஷேக் சர்மா 28 பந்துகளில் 75 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)


## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வடமாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு துவிச்சக்கரவண்டி கொள்வனவு

01. தலைவர். வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் கீழ்வரும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான பொருட்களை வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | பெறுகை இல. | சேவையின் விபரம் | அளவு | | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|---|---|
| 01 | NP/30/02/04/PSDG/Bicycle/2024 | துவிச்சக்கரவண்டி வழங்கல் | பெண்கள் துவிச்சக்கரவண்டி-222 | | 150,000.00 |
| | | | யாழ்ப்பாண மாவட்டம்- | 32 | |
| | | | கிளிநொச்சி மாவட்டம்- | 63 | |
| | | | முல்லைத்தீவு மாவட்டம்- | 63 | |
| | | | வவுனியா மாவட்டம்- | 32 | |
| | | | மன்னார் மாவட்டம்- | 32 | |
| | | | ஆண்கள் துவிச்சக்கரவண்டி-70 | | |
| | | | யாழ்ப்பாண மாவட்டம்- | 10 | |
| | | | கிளிநொச்சி மாவட்டம்- | 20 | |
| | | | முல்லைத்தீவு மாவட்டம்- | 20 | |
| | | | வவுனியா மாவட்டம்- | 10 | |
| | | | மன்னார் மாவட்டம்- | 10 | |

02. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.

03. வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெற்றிருத்தலாகாது என்பதுடன் இலங்கைப் பிரஜையாக அல்லது தனிப்பட்டவராகவோ இருப்பதோடு கேள்விதாரர் மேற்குறிப்பிடப்பட்ட பொருட்களை வழங்குவதற்குரியதான வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. கேள்விதாரர் குறிப்பிட்ட துறையில் இலங்கையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை ஆணையாளர். **வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம். மீனாட்சிஅமமன் வீதி. பண்ணை.யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் வேலை நாட்களில் 09.05.2024 ஆம் திகதி தொடக்கம் 30.05.2024 ஆம் திகதி வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக ரூபா.5000.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை ஆணையாளர். **வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் . மீனாட்சி அமமன் வீதி. பண்ணை.யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல:- 021 222 4782 தொலைநகல்:- 021 205 7103

07. மேலதிக தகவல்கள் பகுதி 2 - **கேள்வித் தரவில் வழங்கப்பட்டுள்ளது.**

08. **கேள்வி ஆவணங்கள் 31.05.2024 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு முன்பதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

09. பொறியிடப்பட்ட **கேள்வி ஆவணங்கள் ஆணையாளர்.** வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம். மீனாட்சிஅமமன் வீதி. பண்ணை.யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ. நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கடித உறையின் மேற்பக்கத்தில் பெறுகை இலக்கம் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்.கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் 31.05.2024 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

10. சகல கேள்விகளுடனும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க பொருத்தமான "கேள்விப்பிணை" ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

11. பெறுகை முன்ஆயத்தக் கூட்டம் 21.05.2024 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு மீனாட்சிஅமமன் வீதி. பண்ணை.யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது திணைக்களத்தில் நடைபெறும்.

12. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைகள் குழு(பெரியது),**
**வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**

(cr.42389) (N-1)





# ஐ.பி.எல். தொடரில் நேற்று களமிறங்கிய வியாஸ்காந்

சமூக வலைத்தளங்களில் வாழ்த்துமழை

**ஹைதராபாத், மே 9**

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் அணிக்காக வியாஸ்காந் அறிமுகமாகியுள்ளார்.

ஹைதராபாத் அணியில் இடம்பெற்றிருந்த வியாஸ்காந்துக்கு கடந்த சில ஆட்டங்களாக வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் லக்னோ அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் அவர் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இணைக்கப்பட்டார். 4 ஓவர்களை வீசிய அவர் 27 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்தார். கே.எல்.ராகுல், நிக்கொலஸ் பூரன் போன்ற சர்வதேச தரமுடைய வீரர்களுக்கு வியாஸ்காந் பந்துவீசினார். அவருடைய பந்துவீச்சை அணித்தலைவர் பட் கம்மின்ஸ் வெகுவாகவே பாராட்டினார்.

வியாஸ்காந்துக்கு விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் வாய்ப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சமூக வலைத்தளங்களில் பலரும் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாவலி...

கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் மற்றும் கருநாட்டுக்கேணிப் பிரதேச மக்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநரின் அலுவலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மகாவலி அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பை நிறுத்துக!, உள்ளூர் மக்களின் பாரம்பரியக் காணிகளைச் சுரண்டாதே!, எமது வாழ்வாதாரத்தைப் பறிக்காதே!, மகாவலித் திட்டத்தை எமது மண்ணில் நிறுத்து!, மகாவலி அபிவிருத்தி முல்லைத்தீவின் பௌத்த மயமாக்கலுக்கா? உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் நிறைவில் மகாவலி நில ஆக்கிரமிப்புத் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருக்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று ஆளுநரின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (அ-ம-20-66)

## சிறிலங்கா...

டுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், அவற்றை பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னரேயே இந்தத் தகவல்கள் வெளியாகியிருந்த போதிலும், அவற்றின் உண்மைத்தன்மையை அறிவதற்காகப் பாதுகாப்பு அமைச்சு தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இலங்கை இராணுவத்தின் முன்னாள் சிப்பாய்கள் ரஷ்ய - உக்ரைன் போரில் கூலிப்படைகளாகச் செயற்படுகின்றனர் என்ற தகவலையும் அவர்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்ற விடயத்தையும் பாதுகாப்பு அமைச்சு சிறப்பு அறிக்கையொன்றின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

ஓய்வுபெற்ற இராணுவத்தினர் பலர் வெளிநாட்டு முகவர்கள் ஊடாக போலி வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு உக்ரைன் - ரஷ்ய போர் முனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் நீண்ட மற்றும் கொடிய உள்நாட்டு போரை முடிவுக்கு கொண்டுவந்த இராணுவத்தினர் இன்று ரஷ்ய - உக்ரைன் போர்க்களத்தில் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர். இலங்கையின் ஆயுதப்படைகளில் கௌரவமாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள் இன்று வெளிநாடுகளில் கூலிப்படையாகச் செயற்படுவது வருத்தமளிக்கின்றது.

அதிகரித்த சம்பளம், குடியுரிமை உள்ளிட்ட போலியான வாக்குறுதிகள் வழங்கப்பட்டு, ஆட்கடத்தல்காரர்களால் அழைத்துச் செல்லப்பட்ட இலங்கையர்கள் ரஷ்ய - உக்ரைன் போரில் முன்களத்தில் போரிடுவதற்காக அனுப்பப்பட்டுள்ளனர். போரில் கொல்லப்பட்டவர்களுக்கு இழப்பீடு ஏதும் வழங்கப்படவில்லை. அத்துடன், காயமடைந்தவர்களுக்கோ அல்லது தற்போது போரிட்டுக் கொண்டிருக்கும் பலருக்கோ சம்பளமும் வழங்கப்படவில்லை.

கூலிப்படையாகச் செயற்படும் இலங்கையர்களின் இருப்பிடங்களையும் ஆட்கடத்தல்காரர்கள் குடும்பத்தினர்களுக்குத் தெரிவிக்கவில்லை. ஆகையினால், ஆசைவார்த்தைகளை நம்பி உயிரைப் பணயம் வைத்து இவ்வாறான சட்டவிரோதத் திட்டங்களில் சிக்கிக்கொள்ள வேண்டாம் - என்றுள்ளது. (அ-ம)

## கிராமியப்...

வேலைத்திட்டம் உட்பட கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஆரம்பிக்கும் அனைத்து வேலைத்திட்டங்களையும் வெற்றியடையச் செய்வதற்கு கிராமிய ரீதியாக செயற்படும் அரச அதிகாரிகளின் அர்ப்பணிப்பு அவசியமானது என ஜனாதிபதி ரணில் வலியுறுத்தியுள்ளார்.

2 ஆயிரத்து 100 புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது. நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கிராம அலுவலர்களாக நியமிக்கப்பட்ட உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். இன்று முதல் நீங்கள் அரசாங்க சேவையில் வெற்றிகரமான அங்கமாக மாறியுள்ளீர்கள். இந்நாட்டின் அனைத்து மக்களின் வாழ்க்கையையும் கட்டியெழுப்ப முயற்சி செய்து வருகிறோம். நாட்டின் அடிப்படை நிர்வாகப் பிரிவான கிராம அலுவலர் பிரிவாக உங்களுக்கு ஒரு பெரும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இன்று வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டின் பொருளாதாரத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். நாங்கள் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டை எட்டியுள்ளதோடு அதிலுள்ள பல நிபந்தனைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போதைய அபிவிருத்தித் திட்டம் கிராமத்தை மையமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்தில் வெற்றிகரமான அறுவடையைப் பெறமுடிந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டின் பெரும் போகத்தில் மீண்டும் வெற்றிகரமான அறுவடையைப் பெற்றோம். இந்தப் பங்களிப்பின் காரணமாக இன்று நாம் பொருளாதார ரீதியில் வலுவடைந்துள்ளோம்.

இதன் மூலம் இன்று 2 ஆயிரத்து 100 கிராம உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளமுடிந்தது. நிர்வாகப் பணிகள் மட்டுமின்றி, கிராமப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் பொறுப்பும் உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம)

## டயானா...

என்று மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவர் நேற்றுத் தெரிவித்ததாவது:-

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பைச் சவாலுக்கு உட்படுத்தப் போவதில்லை. ஆனால், தற்போது புதிய பிரச்சினையொன்று எழுந்துள்ளது.

டயானா கமகே இலங்கை குடியுரிமையற்றவர் என்பதால் அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளது. இங்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமைக்கு அவரே கைச்சாத்திட்டுள்ளார். ஆகவே ஐக்கிய மக்கள் சக்தி சட்டபூர்வமானதா? என்ற பிரச்சினை எழும். அவரே கட்சியை இவர்களிடம் கொடுத்துள்ளார். அவர் அந்தக் கட்சியைப் பதிவு செய்யும்போது அவர் இலங்கைப் பிரஜையாக இல்லாமலே இருந்துள்ளார். இந்த நாட்டைச் சேர்ந்தவர் அல்லாத ஒருவருக்குக் கட்சியைப் பதிவுசெய்ய உரிமையில்லை.

அத்துடன் 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட வேட்புமனுவிலும் அவரா கையெழுத்திட்டார் என்பதும் தெரியாது. அப்படி அவர் கையெழுத்திட்டிருந்தால் அது தொடர்பாகக் கவனம் செலுத்தலாம். எதிரணியின் உறுப்பினர்கள் பலர் நாடாளுமன்ற உணவகத்தில் கதைக்கும்போது மிகவும் குழப்பத்தில் இருப்பது போன்றே இருந்தது - என்றார்.

இதன்போது எழுந்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க,"கட்சியின் பதவிகள் ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இதில் பிரச்சினைகள் கிடையாது" - என்றார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் உரையாற்றிய அமைச்சர் காஞ்சன விஜயசேகர, "பிரச்சினைகள் இல்லை என்று கூறினாலும் இது நீதிமன்றம் செல்லும் பிரச்சினையாகும். நீதிமன்றத்தில் அது தொடர்பில் கருத்துக் கூறவேண்டிவரும். வேட்பு மனுக்களில் யார் கையெழுத்திட்டது? என்றும் பரிசோதிக்க வேண்டிவரும். இதனால் விவாதங்களுக்கு நேரத்தைச் செலவிடுவதை விடுத்து, இந்த விடயத்துக்கு முகம்கொடுப்பதற்குத் தயாராகுங்கள். உங்களுக்கு இந்த விடயத்தில் ஏதோவொரு பிரச்சினை உள்ளது. அவ்வாறு நடக்கக்கூடாது என்றே பிரார்த்திக்கின்றேன் - என்றார். (ம)

## காற்றாலைத்...

பதற்கு மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பைப் பதிவுசெய்து வருகின்றனர். இவ்வாறிருக்கையில், 52 காற்றாலை உயர்மின் திட்டத்துக்காக அதானி நிறுவனத்துக்கு இலங்கை அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்னார்த் தீவில் காற்றாலையால் எமக்கு ஏற்பட்டுள்ள அழிவுகளை பலமுறை தெளிவுபடுத்தியிருந்தும் அவற்றைச் சிறிதும் கருத்திற்கொள்ளாமல் இந்த அனுமதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. பல தடவை நாங்கள் இந்த மக்களின் வாழ்வாதார அழிவு தொடர்பாக சுட்டிக்காட்டியும் அமைச்சரவை இந்தமுடிவை எடுத்திருப்பது வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் மக்களின் வாழ்வாதாரம், வளமான மண் போன்றவைகள் தொடர்ந்து அழிவுநிலைக்கு தள்ளப்படாதிருக்க எமது மக்களை ஒன்றுதிரட்டி பெரும் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கும் நாம் விடயத்தைக் கொண்டு செல்லவுள்ளோம் - என்றார். (அ-ம-60)

## டயானாவுக்கு...

நிறைவடைந்திருந்த நிலையில், வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது. இதன்போதே இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதற்கு தகுதியற்றவர் என்று உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பின் பிரகாரம், டயானா கமகே அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கவேண்டி ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

நீதியரசர்களான காமினி அமரசேகர, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த வரலாற்று முக்கியத்துவமான தீர்ப்பை வழங்கியுள்ளது. மனுதாரர் ஓஷல ஹேரத் சார்பில் சட்டத்தரணி ஹபீல் பாரிஸ், நிஷிகா பொன்சேகா மற்றும் ஷானன் திலேகரத்ன ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். (அ-ம)

## டயானாவின்...

பினராகச் செயற்படுவதற்குத் தகுதியற்றவர் என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. இதனால் டயானாவின் நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்துச் செய்யப்படலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, டயானாவின் இடத்துக்கு முஜிபுர் ரஹ்மானை நியமிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

2020ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு முஜிபுர் ரஹ்மான் வெற்றிபெற்றார். அந்தத் தேர்தலில் டயானா கமகேவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் ஊடாக இடமளிக்கப்பட்டது.

இந்தநிலையில் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் கொழும்பு மாநகரசபை மேயர் வேட்பாளராகக் களமிறங்குவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை முஜிபுர் ரஹ்மான் இராஜினாமாச் செய்தார். எனினும், தேர்தல் நடத்தப்படவில்லை. மறுபுறத்தில் டயானா கமகே ஆளுங்கட்சிக்குச் சார்பாகச் செயற்படத் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## போலி...

உரிமையாக இருந்துள்ளது. வீட்டின் தேவையொன்றுக்காக உறுதியைச் சமர்ப்பிக்கவேண்டியிருந்ததால் அந்த நபர் சுவீனில் இருந்து உறுதியின் பிரதியை அனுப்பிவைத்துள்ளார். அந்தப் பிரதியைப் பெற்றுக்கொண்ட நபர், போலியான அடையாள அட்டையைத் தயாரித்து 12 இலட்சம் ரூபாவுக்கு பிறிதொருவரிடம் ஈடுவைத்துள்ளார். இதுதொடர்பான தகவல் சுவீனில் வசித்தவருக்கு (வீட்டின் உரிமையாளருக்கு) தெரியவர அவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவில் முறையிட்டுள்ளார். முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்ததுடன் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## ஹெரோய்னுடன்...

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் கீழ் செயற்படும், யாழ்ப்பாணம் மாட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவர் 25 வயதுடையவர் என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றி மகுடம் சூடியது காஞ்சிரங்குடா ஜெகன் அணி

மட்டக்களப்பு, மே 9

விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 'விளாவூர் யுத்தம்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுத்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி, ராஜா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

குறித்த சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 27 அணிகள் களமிறங்கியிருந்தன. இதில் 1 ஆம் இடத்தைக் காஞ்சிரங்குடா ஜெகன் அணியும், 2 ஆம் இடத்தை அரசடித்தீவு விக்னேஸ்வரா அணியும், 3 ஆம் இடத்தைப் பனையறுப்பான் கஜமுகா அணியும், 4 ஆம் இடத்தைக் காஞ்சிரங்குடா நாக ஒளி அணியும் பெற்றுக் கொண்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்டார். (ப-125)



# குடும்பச்சுகாதார விழிப்புணர்வு

நல்லூர்ப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்திநிலைய மாணவர்களுக்கான குடும்பச்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு ஐ.எம்.எச்.ஓ. நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் நல்லூர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இனப்பெருக்க சுகாதாரம், இளவயதுத் திருமணம், பால் நிலை வன்முறை, குழந்தைப் பேறுக்குப் பின்னரான சுகாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பில் கருத்துரைகள், பயிற்சிகள் மற்றும் மகிழ்வூட்டல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. யாழ். பல்கலைக்கழக மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் மருத்துவத்துறையும், சமூக மருத்துவத் துறையும் இணைந்து செயற்படுத்திவரும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான செயற்றிட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட சமூக சுகாதார உதவியாளர்களால் இச் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-159)

## விற்பனைக்கு

**பப்பாசிக் கன்று (ரெட்லேடி)**

T.P. 077 507 0473

(CS/28264) J-1

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தக சாலை) மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு.
ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
அனுபவம் உள்ளவர்களுக்கு சிறந்த சம்பளம் வழங்கப்படும்.

(CS/442) J-1

077 494 9683, 077 077 6469

## தேவை

**பிராமண ஆலயக்குருக்கள் மற்றும் உதவிக் காசாளர் தேவை.**
(உதவிக் காசாளர் - சைவப் பாரம்பரியம் மிக்கவர் விரும்பத்தக்கது)

* விண்ணப்ப முடிவுத் திகதி: 17.05.2024 (சுயவிபரக் கோவையை ஆலய காரியாலயத்தில் ஒப்படைக்கவும்).
* சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 021 222 4882
077 906 4595
077 3518 231

பரிபாலன சபை
கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தானம்
கலட்டி.

(CS 443) A-1

## பணியாளர் தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.
1.பில் கிளாக்
2.தச்சு வேலையாளர்
3.தூண் அரிவு, ஓட்டைக் கல் அரிவு, பூக்கல் அரிவு, கல் அரிவு

(CS 00448) S-1

076 276 8233

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு:

(CS/54971) J-1

074 173 7684

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை **15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம்** வரை
- தரகர் தேவையில்லை.

தொடர்பு :- 077 886 2927

(CS/375) J-1

## மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு

**கிளாலிச் சந்தியில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் (2Km) தூரத்தில் ஆறு ஏக்கர் (6ஏக்கர்) மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு.** அக்காணி நான்கு பக்கமும் 10 அடிக்கு ஒரு தூண் போட்டு ஏழுவரி கம்பி அடித்து கேற்றும் போட்டு பாதுகாப்பாக உள்ளது.

தொடர்பு:- 077 649 1027

(CS/54977) J-1

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் பரமசிவராசா

(ஓய்வுபெற்ற கமநலசேவை உத்தியோகத்தர், சமாதான நீதவான் - JP)



தோற்றம் : 08.11.1939
மறைவு : 07.05.2024

யாழ். அத்தியடியைப் பிறப்பிடமாகவும், யாழ். நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பரமசிவராசா நேற்றுமுன்தினம் (07.05.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2024) வியாழக்கிழமை (8/1, புகையிரத தெற்கு வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 724 0431

(cs 54981) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 04 . 1948



மறைவு
07 . 05 . 2024

### கணேசமூர்த்தி கமலநாயகி (கமலா)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசமூர்த்தி கமலநாயகி நேற்றுமுன்தினம் (07.05.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசா - அன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - பாக்கியம் தம்பதியரின் மருமகளும், கணேசமூர்த்தியின் அன்பு மனைவியும், ஜெயராசநாயகி, லோகேஸ்வரி, ஜெயக்குமார், விஜயகுமார் ஆகியோரின் அன்புச்சகோதரியும், அனுபாமா, அனிதா, சுலக்ஷனா ஆகியோரின் பாசமிகு தாயாரும், துஸ்யந்தன், கருணாகரன், மனோசுதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அம்ஷிகா, அக்ஷிகா, ஷாகித்திகன், கைலாஷ், சுவர்ணிக்கா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2024) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல.454, நாவலர் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.454, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 703 6914

(CS 54982) N-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.